**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்  29-ஆம் நாள்,**
**CC.152/2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 29.10.2025-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிவேல் | வயது | : | 54 |
| த.பெ | : | ஆதிமூலம் | நிலை | : | **PW-3  (LW-6)** |

**A1 to A4 are called absent. Defence counsel filed petition u/s 317- Cr.P.C, Perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -**

1) நான் தற்போது வடலூரில் வசித்து வருகிறேன். குறிஞ்சிப்பாடி வடக்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி ராஜாவை தெரியும், மற்ற எதிரிகளை தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 1-ஆவது எதிரி ராஜா என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மற்றும் 28.11.2011-ஆம் தேதியிட்ட கைப்பற்று மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அவை முறையே **அ.சா,ஆ.2** மற்றும் **அ.சா,ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையொப்பங்களை 28.11.2011-ஆம் தேதியன்று புதுச்சத்திரம் காவல் ஆய்வாளர் மதியம் சுமார் 2.45 மணிக்கு எனக்கு போன் செய்து ஆலப்பாக்கம் சிந்தாமணி குப்பம் பஸ்ஸ்டாப்பிற்கு வழக்கு ஒன்றை குறித்து விசாரிக்க வேண்டும் என்று வரசொன்னார். நானும் எனது கிராம உதவியாளர் ராஜா என்பவரும் மேற்படி இடத்திற்கு சென்றோம். அங்கு சுமார் 3 மணிக்கு புதுச்சத்திரம் காவல் ஆய்வாளர் ராஜா என்பவரை விசாரித்தார்.

2) அவரிடம் எதிரி தன்னைப்பற்றி கூறிவிட்டு, இந்த வழக்கு சம்மந்தப்பட் இரு சக்கர வாகனமான சிகப்பு கலர் நம்பர் பிளேட் இல்லாத பஜாஜ் வாகனத்தைபற்றி ஆய்வாளர் விசாரித்தபோது  அது தனது நண்பர் **ஸ்ரீ**காந்த் என்பவரின் இரு சக்கர வாகனத்தை தன்னை வைத்துக்கொள்ள சொன்னதாகவும், அந்த வாகனத்தை பயன்படுத்தி தனது நண்பர்களுடன் 05.08.2011-ல் இரவு 8 மணிக்கு ஆலப்பாக்கம்

ரயிலடி அருகே  கணவன், மனைவி இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்தபோது அந்த பெண்ணின் கழுத்திலிருந்த தங்க தாலி செயினை பறித்தபோது பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தை 1-ஆவது எதிரி  ஆலப்பாக்கம் சிந்தாமணி பேருந்து நிலையம் அருகே வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்ய, என் முன்னிலையிலும், எனது கிராம உதவி ஆய்வாளர் ராஜா என்பவர் முன்னிலையிலும் ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். எதிரி ராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.5**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 வரை உள்ள எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1)  என் பெயர் பழனிவேல். என் அப்பா பெயர் ஆதிமூலம். நான் கிராம நிர்வாக அலுவலர் என்பதற்கான அரசாங்க அடையாள அட்டை உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையில் என் தந்தையின் பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஆறுமுகம் என்பது என் தந்தை பெயரா என்றால்  இல்லை, அழைப்பாணையில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சமயத்தில் நான் எந்த கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன் என்றால் ஆலப்பாக்கம் கிராமத்தில். ஆறுமுகம் மகன் பழனிவேல் நான் இல்லை என்றால் சரிதான். 28.11.2011 அன்று நான் பணியில் இருந்தேனா என்றால் ஆமாம், அன்று முழுவதும் பணியில் இருந்தேன். சம்பவ இடத்திற்கு நானும் என் உதவியாளரும் சேர்ந்துதான் சென்றோம். சிந்தாமணிகுப்பத்தில் நான் எங்கு நின்றுக்கொண்டிருந்தேன் என்றால் ஆலப்பாக்கத்திலிருந்து சிந்தாமணிகுப்பம் செல்லும் சாலையின் ஓரமாக மேற்குப்பக்கமா நின்றுகொண்டிருந்தோம். போலிசார்  எங்கு நின்றுகொண்டிருந்தார்கள் என்றால் என்னுடன்தான் நின்றுகொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் எந்த எந்த காவல் அதிகாரிகள் இருந்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் மற்றும் 2 காவலர்கள் என மொத்தம்  3 அதிகாரிகள் இருந்தார்கள்.

2) அந்த இடத்தில் பொதுமக்கள் எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்றால் சுமராக 7-8 பேர் இருந்திருப்பார்கள். அந்த நபர்களையும் போலிசார் விசாரித்தனர். அவர்களிடம் போலிசார் கையெழுத்து வாங்கினார்களா என்றாலும் பெயர், விலாசம் குறித்து எழுதிக்கொண்டார்களா என்றாலும் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரியிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தை கேள்வி பதிலாக பதிவு செய்தார்களா என்றால் இல்லை, சம்பவ இடத்தில் போலிசார் எதிரியிடம் விசாரணை செய்யும்போது அவர் சொன்ன பதில்களை என்னை கேட்க சொன்னர்கள் நானும் எதிரி சொன்ன பதிலை கேட்டேன்,

பின்பு என்னை காவல் நிலையம் வந்து கையொப்பம் போடச்சொன்னார்கள். நான் காவல் நிலையம் செல்லும்போது சுமார் எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை சுமார் 5.30 மணி இருக்கும். நான் மட்டும்தான் காவல் நிலையத்திற்கு சென்று கையொப்பம் போட்டேனா என்றால் என்னுடன் கிராம உதவியாளரும் வந்து அவரும் நானும் சேர்ந்து கையொப்பம் போட்டோம். காவல் நிலையத்தில் எழுதி வைக்கப்பட்டிருந்த ஆவணத்தில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் எழுதி வைக்கப்பட்டிருந்த ஆவணத்தை என்னிடம் போலிசார் படித்து காட்டினார் பின்பு நான் கையொப்பம் செய்தேன்.

3) காவல் நிலையத்தில் இருந்த எந்த அதிகாரி என்னிடம் கையொப்பம் பெற்றார் என்றால் அங்கிருந்த காவல் நிலைய ரைட்டர் கையொப்பம் பெற்றார். நான் VAO-ஆக இருக்கும் நிலையில் கையொப்பம் போடும்போது Seal உடன் கையொப்பம் போட்டேனா என்றால் Seal போடவில்லை கையொப்பம் மட்டும்தான் போட்டேன். நான் எந்த ஊரில் பணி செய்கிறேன் என்பதை VAO Seal-ல்தான் இருக்கும் என்றால் சரிதான், நான் கையொப்பம் போடும்போது எந்த ஊரின் VAO என்று கையாலே எழுதிவிட்டேன். இந்த சம்பவத்திற்கு சாட்சியாக இருக்கவேண்டி என்னுடைய மேல் அதிகாரிக்கு தகவல் சொன்னேனா என்றால் எழுத்துப்பூர்வமாக கடிதம் மூலமாக சொன்னேன். நான் எங்கே கையொப்பம் செய்தாலும் VAO Seal-உடன்தான் போடுவேணா என்றால் இல்லை, சூழ்நிலைக்கேற்றவாறு என்னிடம் VAO Seal இல்லாதபோது கையிலே எழுதிவிடுவேன். அந்த சம்பவத்திற்கு பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. உண்மையில் நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் என் அப்பாவின் பெயரை சரியாக குறிப்பிட்டு இருப்பார்கள் என்றாலும் நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் சரியல்ல, நான் சம்பவ இடத்தில்தான் இருந்தேன் என் அப்பாவின் பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று அப்போதே போலிசாரிடம் கூறினேன், அவர்களும் அதனை குறித்துக்கொண்டனர்.

4)காவல் நிலையத்தில் வைத்துதான் போலிசார் கேட்டதற்கிணங்க ஆவணத்தில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று படித்து பார்க்காமல் என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் எதிரி ராஜாவை சிந்தாமணி குப்பத்தில் நேரடியாக பார்த்தது இல்லையென்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் கையொப்பம் போட்டுவிட்டு 2 நிமிடத்தில் சென்றுவிட்டேனா என்றால் 10 நிமிடம் கழித்துதான் சென்றேன். காவல் ஆய்வாளரை பார்த்துவிட்டு செல்லவேண்டும் என்பதற்காக 10 நிமிடங்கள் என்னை காவல் நிலையத்தில் இருக்க சொல்லி

ஆய்வாளரை பார்த்தபின்பு என்னை அனுப்பினார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் நிலைய ரைட்டர் எத்தனை கையொப்பம் வாங்கினார் என்றால் ஒரு கையொப்பம் வாங்கினார்.

**4-ஆவது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**